**தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 22 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,811.70 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 2,013.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 798.23 மில்லியன் அதாவது 28.39 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **செலவினம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 727.30 | 706.84 | 20.46 | 2.81 |
| மூலதனம் | 2,084.40 | 1,306.63 | 777.77 | 37.31 |
| **மொத்தம்** | 2,811.70 | 2,013.47 | 798.23 | 28.39 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்

அமைச்சிற்குரிய 21901 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11.00 | 10.69 | 6.00 | 8.41 | 32.00 | 30.08 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0301/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 12,910 ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0016/0088/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 176.81 மில்லியன் ஆக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகளும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (v) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 மூலதன செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,200,000 ஆன மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 04 மூலதன செலவின விடயங்களின் நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 83 மில்லியன் கூட்டுத்தொகையான 123 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 75 மில்லியன் ஒப்பந்த வைப்புகளுக்குரிய நிறுவனங்களின் பெயர்கள் மாத்திரம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 569(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

21901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,715,710 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் தனியால் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிகளுக்கு இடையே ரூபா 548,538 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள விளையாட்டு பயிற்சி நிலையத்திலுள்ள 17 விளையாட்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

விளையாட்டு திறமைகளை இனங்காணும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சிக்காக அவசர கொள்வனவொன்றாக கருதி தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ஒன்று ரூபா 777 வீதம் 2,000 ரீ சேர்ட் ரூபா 1,554,000 இற்கு திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ரீ சேர்ட்களில் ரூபா 1,160,838 பெறுமதியான 1,494 அளவிலான ரீ சேர்ட் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 751 | திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் அனைத்துப் பொருட்கள் பதிவேடொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 180,000 பெறுமதியான இரண்டு வலைப்பந்து தூண்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்திற்குச் சொந்தமான குழூாம் வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் |

மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன குறித்த காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.11 ஆம் பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 மே 15 ஆந் திகதிய முஅ/01/2015/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 07 (அ) பந்தி | வெளிநாடு செல்வதற்குரிய படியொன்றோ அல்லது செலவின மீள் நிரப்பலொன்றுக்காக கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அது செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டின் போது 12 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றமைக்காக ரூபா 4,811,042 கொடுப்பனவு மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்படாமல் 2017 ஆம் ஆண்டின் கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. |

**3.7 செயலாற்றல்**

(அ) 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,348 மில்லியன் மதிப்பீட்டு நிதிஏற்பாடுகளின் மூலம் 7 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் 54 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 20 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 60 மில்லியன் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய குழுக்களை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 7.5 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு 48 மாவட்ட விளையாட்டு குழுக்கள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தன. எஞ்சிய தொகை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளிலிருந்து விலகி தேசிய விளையாட்டு விழாவிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2011 யூலை 06 ஆந் திகதிய 2011/14 ஆம் இலக்க ‘‘விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டுத் தொகுதி நிர்மாணம்’’ என்ற தலைப்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் அனைத்து விளையாட்டு வசதிகளுடன் கூடிய 09 விளையாட்டு தொகுதிகள் 2013-2014 காலப்பகுதியில் நிர்மாணிக்கும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது மாகாண விளையாட்டு தொகுதி நிர்மாண செயற்திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாண விளையாட்டு தொகுதி அநுராதபுர நகரத்திலும் வட மாகாணத்தின் விளையாட்டுத் தொகுதி கிளிநொச்சி நகரத்திலும் நிர்மாணிப்பதற்கு ரூபா 172 மில்லியன் மற்றும் ரூபா 324 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. வட மாகாணத்தின் விளையாட்டுத் தொகுதியின் ரூபா 50 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட பார்வையாளர் மண்டபத்திற்காக மாத்திரம் ரூபா 124 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிதி ஏற்பாடு போதியளவு இன்மையால் இரண்டு மாகாண விளையாட்டு தொகுதிகளின் நிதி ஏற்பாடு ஒன்றிணைக்கப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அநுராதபுரம் விளையாட்டுத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாடு இல்லாமை காரணமாக கிளிநொச்சி விளையாட்டரங்கின் விளையாட்டு திடல் மற்றும் கிரிகட் விளையாட்டரங்கு என்பவற்றை நிர்மாணிக்க முடியாதிருந்தது.

### 3.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

-------------------------------------------------------------------------------

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

---------------------------------------------------

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் 2016 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் அவ்வாறு சீராக்கப்பட வேண்டிய கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்டிருந்த போதும், கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 66,764 ஆன 10 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 912,395 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 903,769 தொகையான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் என்பன மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொண்ட கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இந்தியாவில் நடைபெற்ற 12 தென் ஆசிய போட்டிற்காக 477 விளையாட்டு வீர வீராங்கனைகளுடன் 288 உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்தனர். எவ்வாறாயினும் ஒலிம்பிக் குழு பொதுச் செயலாளரின் 2016 மார்ச் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இவ்விளையாட்டு விழாவிற்காக பங்கு பெறச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களின் அளவு விளையாட்டு வீர வீராங்கனைகளின் 30 சதவீதமாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூடியது 143 உத்தியோகத்தர்கள் பங்கு பெறச் செய்யப்பட வேண்டிய போதிலும் 228 உத்தியோகத்தர்கள் பங்கு பெறச் செய்யப்பட்டிருந்தமை மேற்படி கடிதத்திற்கு முரணாக 145 உத்தியோகத்தர்கள் விளையாட்டு விழாவில் பங்கு பெறச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) இந்தியாவில் 2016 பெப்ரவரி மாதத்தின் போது நடைபெற்ற 12 ஆவது தென் ஆசிய போட்டிகளுக்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் இலங்கை ஒலிம்பிக் குழுவிற்கு வழங்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூபா 6,878,916 ஐ 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

---

(அ) விளையாட்டுத் திறமைகளை இனங் காண்பதற்கான செயற்திட்டத்தை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் ரீ-சேர்ட் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சந்தை ஒப்பிட்டு விலை முறைமையின் கீழ் 942 நிறுத்தற் கடிகாரங்களை கொள்வனவு செய்வதற்காக ஒன்று 3,750 வீதம் ஆகக் குறைந்த விலையை சமர்ப்பித்த வழங்குனருக்கு நிறுத்தற் கடிகாரங்களை வழங்குமாறு அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்குனரால் 908 நிறுத்தற் கடிகாரங்கள் ஒன்று ரூபா 9,500 வீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 8,626,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 5,221,000 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்தது.

(ii) விளையாட்டுத் திறமைகளை இனங் காண்பதற்கான பயிற்சி செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் பயிற்சி நிலையத்திற்கு 6 லைட் மிசைல் வீதம் 314 பயிற்சி நிலையங்களுக்காக 1884 மிசைல்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அதற்காக இரண்டு வழங்குனர் முன்வைத்திருந்ததுடன் முதலாவது வழங்குனருக்கு பெறுகை குழு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த இரண்டு வழங்குனர்களுக்கும் கொள்வனவு கட்டளை வழங்கப்பட்டிருந்தமை காரணமாக முதலாவது வழங்குனர் ரூபா 4,950 வீதம் 1,872 உம் இரண்டாவது வழங்குனர் ரூபா 2,270 வீதம் 1884 லைட் மிசைல்களும் வழங்கியிருந்தனர். ரூபா 4,950 வீதம் இலகு மிசைல்களை வழங்கிய வழங்குனருக்கு 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அத்தோடு அம் மிசைல்களில் 1872 மிசைல்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(iii) விளையாட்டு திறமைகளை இனங் காண்பதற்காக ரூபா 53,488,234 ஆன 15 விளையாட்டு உபகரண உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையிலிருந்து விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.6.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் பொருட்கள் மற்றும் திறமைகளை இனங் காண்பதற்கான 15 வகையான பொருட்களுக்காக போதுமான மற்றும் போதியளவு விதந்துரைப்புக்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.5.1 (ஊ) வழிகாட்டலின் பிரகாரம் தொழில் நுட்பக் குழு மதிப்பிட்டு குழு மற்றும் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வழங்குனர் தெரிவு செய்யப்பட வேண்டிய

போதிலும் ரூபா 8,626,000 பெறுமதியான நிறுத்தற் கடிகாரங்கள் மற்றும் ரூபா 9,266,400 பெறுமதியான லைட் மிசைல் கொள்வனவின் போது தொழில்நுட்ப குழு பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பெறுகை குழுவினால் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை செயற்பாடு செயற்திறனாக திட்டமிடப்பட வேண்டிய போதிலும் 18 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் மேற்கொண்ட ரூபா 26,812,548 பெறுமதியான பெறுகைகள் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

டொரிங்டனில் அமைந்துள்ள வலைப்பந்து விளையாட்டரங்கு நிர்மாண வேலைக்காக திறந்த கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சின் மூலம் அந்நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான மதிப்பிடப்பட்ட ரூபா 22.8 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 8.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந் நிர்மாணம் சர்வதேச வலைப்பந்து சட்டத்திற்கு இணங்கும் விதந்துரைப்புக்களிலிருந்து விலகி செயற்பட்டிருந்தது.

**3.12 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 09 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 22 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 234 | 168 | 66 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 42 | 10 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | 324 | 243 | 83 | 02 |